மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) உண்டு.

(இ) திருக்கோயிலின் திருப்பணி வேலைகளுக்கான ரூ. 37,000-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்பொழுது ஆரம்பிக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அறநிலைய ஆட்சித் துறையினால் 21—6—1972-லேயே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. திரு. வெங்கடேச முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பணிக் குழு ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் கோயில் வருமானம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், திருப்பணிக் குழுவினர் சரியான முயற்சியிலே ஈடுபடமுடியாத காரணத்தினாலும், போதுமான பணவசதி இல்லாமல் இந்த வேலை தடைபட்டுள்ளது. விரைவில் ஆரம்பித்து முடிப்பதற்கான நிலைமை எதிர்காலத்திலே ஏற்படலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

"நாத்திகம்" நாளிதழில் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதி பிரசுரிக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்ற மேலவை 157-வது விதியின்கீழ் திரு வி. வெங்கா அவர்கள் கீழ்க்கண்ட உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அது பின்வருமாறு :

"மார்ச் திங்கள் 7 ஆம் நாள் மேலவை உறுப்பினர் திரு. பக்கர் அவர்கள் பேசும்போது அவரது பேச்சின் ஒரு பகுதி முதல்வர் அவர்களின் வேண்டுகோளின்படி மேலவைக் குறிப்பிலிருந்து தலைவர் அவர்களின் ஆணைப்படி நீக்கப்பட்டு விட்டது. மேலவைத் தலைவர் அவர்களால் நீக்கப்பட்ட அப்பகுதி 8—3—1975 அன்றைய நாத்திகம் ஏட்டில் கட்டம் போட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இது மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது உரிமை மீறல் நிகழ்ச்சியாக இருப்பதால் இதை தலைவர் அவர்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்".

உறுப்பினர் முன்னறிவிப்பில் சொல்லியவாறு நாத்திக நாளேட்டில் இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதி கட்டமிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்ட பகுதிகள் பிரசுரிக்கப்படக் கூடாது. அவ்வாறு பிரசுரித்தால், அது இந்த அவையின் உரிமையை மீறுவதாகும்.

இப்பிரச்சினை மீது முடிவெடுப்பதற்கு முன்பு பத்திரிகையின் ஆசிரியரையும் அதைப் பிரசுரித்தவரையும் விளக்கம் கேட்டு, அவர்கள் அளிக்கும் விளக்கத்திற்குப்பின் இந்த பிரச்சினையை மேலும் பரிசீலிக்கலாமென்று கருதுகிறேன். அதன்படி ஆசிரியரையும் அதைப் பிரசுரித்தவரையும் விளக்கம் கேட்ட பின் அவையில் அறிவிப்பேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையில் வேலைநிறுத்தம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. டி. சந்தோஷம் அவர்கள் சி.எம்.சி. மருத்துவமனைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

Negotiations are going on. It may be taken up after 21st March.

4. அறிவிப்பு

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து

Mr. CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to-day, the following revised programme of business has been decided:

12—3—1975 to 21—3—1975 } No meeting.